DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**STC.No.154/2025**

Prosecution **DW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | முத்துராஜா | கிராமம் : | |
| தந்தை பெயர் : | வைரப்பெருமாள் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.06.2026

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம் திருக்காம்புலியூரில் குடியிருந்து ஆட்டோடிரைவராக வேலை செய்து வருகிறேன். திவ்யா எனது மனைவி ஆவார். புகார்தாரர் தினேஷ் எனதுநண்பர் ஆவார் 6 வருடமாக பழக்கம். எனது மனைவி மீது தினேஷ் என்பவர் காசோலை மோசடி வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியும். 30.07.2025 ம் தேதி எனது மனைவி கரூரீல் ஆல்பா கம்பெனியில் டைலர் வேலை செய்து வந்தார் .

2. காலை 08.00 மணிக்கு கம்பெனிக்கு உள்ளே சென்று இரவு 07.00 மணிக்கு தான் வெளியே வருவார். 30.07.2025 ம் தேதி நான் புகார்தாரர் தினேசை பார்க்கவில்லை நான் ஆட்டோ ஓட்டச்சென்று விட்டேன். நான் தினேசிடம் ஒரு லட்ச ரூபாய் சீட்டு போட்டிருந்தேன் அதற்காக பணம் வாங்குவதற்கு அடிக்கடி என் வீட்டிற்கு வருவார். வரவு செலவு என் வீட்டில் உட்கார்ந்து பார்ப்பார். அப்போது புகார்தாரர் வழக்கு காசோலையை எங்கள் வீட்டில் இருந்து எடுத்து வந்துவிட்டார்.

3. எனது மனைவி பேரில் எக்விடாஸ் வங்கியில் லோன் வாங்குவதற்காக எனது மனைவி 12 செக்கில் கையெழுத்து போட்டு வைத்திருந்தார். 11

காசோலைகளை வங்கியில் கொடுத்துவிட்டேன் மீதி இருந்த 1 காசோலை எனது வீட்டில் வைத்திருந்தேன். வழக்கு போட்ட பிறகு தான் எனது வீட்டில் உள்ள காசேலையை எடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியும். நான் தினேஷ்குமார் 30.07.2025 ம் தேதி நான் பார்க்கவில்லை பணம் வாங்கவும் இல்லை எனது மனைவியின் காசோலை கொடுக்கவும் இல்லை . எனக்கும், தினேஷ்குமாருக்கும் சீட்டு போட்டதற்கான வரவு செலவு அனைத்தும் முடிந்துவிட்டது.

**<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.10 10:25:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.